ஏற்கெனவே இந்த வசதிகள் எதுவுமே இல்லாதிருந்த கொறடாக்கள் இவ்வளவு வசதிகள் பெறுவதில் ஒரு ஆண்டுக் காலத்திற்காவது மகிழ்ந்துகொண்டிருக்கலாம். பிறகு இதுபற்றி யோசிக்கலாம்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, போபாலில் நடந்ததைப் போன்று அகில இந்திய சட்டசபைகளின் கொறடாக்களின் மாநாடு ஒவ்வொரு வருடமும் நடைபெறுகிறது. அதற்கு எல்லா சட்டசபை களிலும் உள்ள எல்லாக் கட்சிகளின் கொறடாக்களும் அழைக்கப் படுகிறார்கள். அப்படியிருக்க நமது மாநிலத்திலிருந்து ஆளும் கட்சியின் கொறடாக்கள் மட்டும் அனுப்பப்படுகிறார்கள். எல்லா மாநிலங்களிலிருந்தும் அனைத்துக் கட்சிக் கொறடாக்களையும் அனுப்பி வைக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே எதிர்க் கட்சிகளுடைய கொறடாக்களையும் அனுப்புவதற்கு இனிமேல் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆளும் கட்சிக் கொறடாக்களிலே கூட சட்டமன்றப் பேரவை கொறடா தான் அனுப்பி வைக்கப்பட்டார். அடுத்து நடைபெறுகிற மாநாட்டிற்குக் கொறடாக்கள் இந்த விண்ணப்பத்தைத் தருவார்களே யானால், அதுபற்றிக் கவனிக்கலாம்.

Virus Disease in Banana Plantations

* 319 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any virus infection was traced in Banana plantations in the State during October–November, 1972; and

(*b*) if so, the action taken thereon?

வாழைத் தோட்டங்களில் வைரஸ் நோய்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், 1972-ஆம் ஆண்டு அக்டோபர்–நவம்பர் திங்களில், வாழைத் தோட்டங்களில், வைரஸ் நோய் ஏதும் பரவியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டதா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

1973 மார்ச் 31]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம். வாழையைத் தாக்குகின்ற முடிக்கொத்து வைரஸ் நோயானது கீழ் பழனி மலைக் குன்றுகளிலுள்ள மலை வாழைத் தோட்டங்களில் முக்கியமாக அடுக்கம், கும்பாரையூர், பூளத்தூர் போன்ற கிராமங்களில் அதிக அளவில் காணப்பட்டது.

(இ) வேளாண்மைத் துறை அதிகாரிகள் அடங்கிய ஒரு குழு அடுக்கம், கும்பாரையூர், பூளத்தூர் போன்ற கிராமங்களுக்குச் சென்று "செய்முறை விளக்கநாள்" நடத்தினார்கள். மேற்படி கிராமங்களில் நோய் தாக்கப்பட்ட தோட்டங்களைப் பார்வையிட்டு, எப்படி முடிக்கொத்து நோயினை அறிந்து கொள்ளுதல், எவ்வாறு இந்நோய் தாக்கிய மரங்களை அழித்தல், நோய் மேலும் பரவாமல் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தல் என்ற விபரங்கள் எடுத்துக் கூறப்பட்டன.

THIRU G. VASANTHA PAI : Sir, of late we have found bananas with more seeds in it than pulp. Is it due to any virus infection or is it a variety of banana?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அதனாலே ஏற்பட்டதல்ல.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, வாழை நோயால் எங்கள் மாவட்டத்திலேகூட வாழை மிகுதியாகப் பாதிக்கப் பட்டிருக்கிறது. இதற்கு புது ஆராய்ச்சியில் ஏதாவது மருந்து கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, பல்வேறு பகுதிகளில் பல்வேறு நோய்கள் காணப்படுகின்றன. அவைகளையெல்லாம் கண்டறிந்து அவ்வப்போது நடவடிக்கை எடுப்பதற்குப் பல்வேறு இடங்களிலே ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

திரு. எம். சங்கரலிங்கம் : இந்த மலை வாழைப் பழத்திற்கு பழனி மலைப் பகுதிகளிலே வைரஸ் நோய் ஏற்பட்டிருப்பதாக அமைச்சரவர் கள் பதிலளித்தார்கள். கன்னியாகுமரி மாவட்டப் பகுதிகளில் இந்த மட்டிப் பழம்—மட்டு என்பது மருவி மட்டி ஆகிவிட்டது—இப்போது அழுகிப்போய்விட்டது. இந்த மாதிரி நோயினால், சில வருடங்களாகவே தொடர்ந்து அந்த நோய் இருந்து வருவது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா? அது பற்றி ஏதேனும் ஆராய்ச்சி செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தனிப்பட்ட வகையில் அதுபோல அரசுக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. தெரிவிக்கப்பட்டு இருக்குமேயானால், இதுபற்றி உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, ஏதோ இந்த வைரஸ் நோய் ஒரு பகுதியில் ஏற்பட்டிருப்பதாகக் கூறினார்கள். ஆனால் மாநில அளவில் எங்கெங்கே ஏற்பட்டிருக்கிறது என்கின்ற தகவல் அமைச்சரவர்களுக்கு அதிகாரிகள் கொடுக்கவில்லையென்றுதான் தோன்றுகிறது. என் மாவட்டத்திலும் ஆங்காங்கே பரவலாக இருக்கிறது என்று அந்த அதிகாரிகளே கூறுகிறார்கள். அதைப் போக்குவதற்கு அரசாங்கம் நிரந்தரமாக ஒரு உத்தரவை இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அப்படிப் பல்வேறு பகுதிகளில் இருப்பதைத்தான் நான் "பல்வேறு" என்று குறிப்பிட்டேன். அவைகள் தனியாக எந்தெந்தப் பகுதி என்று கேட்பார்களேயானால் அவைகளைப்பற்றித் தனியாக ஒரு கேள்வி போடுவார்களேயானால், விவரங்களைத் தெரிவிக்கிறேன்.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, இந்தச் சப்போஸ்டா வாழை பயிர் செய்வதால் இப்படிப்பட்ட நோய்கள் தடுக்கப்படுமென்று அதிகாரிகள் சொல்லுகின்றார்கள். அதனுடைய மாலை கன்னுடைய விலைகள் அதிகமாக இருக்கின்றன. ஒரு பாதி அளவில் சலுகை செய்து அதை விவசாயிகளுக்குக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் கம்பம் பகுதியில் பச்சைய குலை நோய் என்று ஒரு நோய் காணப்பட்டது. அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு வேண்டிய பல்வேறு உதவிகளைத்தான் செய்துவருகிறோமே தவிர, அதற்குத் தனி மானியம் எதுவும் வழங்கப்படவில்லை.

Construction of Prefabricated Houses

* 320 *Q*.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the State Government had any discussion with the officials of the Hindustan Housing Factory about the construction of Prefabricated houses during December 1972; and

(*b*) if so, the details thereof?